DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.574/2018

DEPOSITION OF WITNESS 11 FOR PROSECUTION..

Name : திரு. சந்திரன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.8.2019.

மு.வி.

நான் தற்போது தலைமை மருத்துவமனை, உசிலம்பட்டியில் மருத்துவராக பணிசெய்து வருகிறேன். நான் 1.4.2018ம் தேதி பணியில் இருந்தபோது எழுமலை வட்ட காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து தகவல் பெறப்பட்டு 50 வயது மதிக்கத்தக்க நல்லம்மாள் , க/பெ. சின்னப்பாண்டி என்பவருக்கு தங்கமாயன் என்ற தலைமைக்காவலர் 196 என்பவர் தன்னிடம் பிரேத பரிசோதனை செய்யுமாறு வேண்டுகோள் கடிதம் மதியம் 3.30 மணியளவில்கொடுத்தார். அந்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.13. அதன்பேரில் அன்று நான் மதியம் 4.30 மணியளவில் பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். பெண் பிரேதமானது முதுகு, தரையில் படுமபடி மல்லாக்க படுத்திருந்தது. மரண விறைப்புத்தன்மை கை, கால்களில் காணப்பட்டது. கண் இமைகள் மூடிய நிலையிலும் நாக்கு வாயினுள் இருந்தது. காதிலும் வாயிலும் இரத்தம் வழியவில்லை.

வெளிப்புறக்காயங்கள்

சிதைந்த வெட்டுக்காயமானது முன்பக்க கழுத்தில் , வலது காதுக்கு கீழ் இருந்து உறராய்டு குருத்தெலும்பு வழியாக இடதுபக்க கழுத்து முழுவதும் 3 செ.மீ கீழே இருந்தது. பின்கழுத்தில் எந்தவித வெட்டுக்காயம் இல்லை. உறராய்டு குருத்தெலும்பானது முழுவதும் வெட்டப்பட்டும் கழுத்தில் உள்ள இரத்தநாளங்கள் அனைத்தும் நரம்புகளும் வெட்டப்பட்டிருந்தன. அந்த வெட்டுக்காயமானது கழுத்தின் உள் எலும்பாகிய சர்விக்கல் என்ற கழுத்து எலும்பு 5, 6-ஐ வெட்டி பிளந்த நிலையில்

இருந்தது. நுரை தள்ளிய சளி வெட்டுப்பட்ட மூசசுக்குழாயில் நுரை தள்ளிக்கொண்டு இருந்தது.

உள்புற பரிசோதனை

உள்புற பரிசோதனையில் மூளை, நுரையீரல், இருதயம் , மண்ணீரல், கல்லீரல், குடல், வயிறு, விலா எலும்பு எல்லாவிதகாயங்களும் வெளிறி காணப்பட்டது. நாவடி எலும்பு நன்றாக இருந்தது. கபால மண்டை ஓடும் நன்றாக இருந்தது. வயிற்றில் பாதி செரிக்கப்பட்ட உணவு இருந்தது. மூத்திர பை காலியாக இருந்தது. கழுத்தில் உள்ள முதுகெலும்பானது வெட்டிய நிலையிலும் அதனை சுற்றியுள்ள சவ்வுகளும் வெட்டப்பட்டிருந்தது.

கருத்து

மேற்படி நபர் அவருக்கு முக்கிய உறுப்புகளான மூச்சுக்குழாய், கரோட்டின் என்ற மூளைக்கு செல்லும் இரத்தநாளம் வெட்டுப்பட்டதாலும், கழுத்தில் உள்ள நரம்ப முடிச்சு வெட்டுப்பட்டதாலும், அதனால் ஏற்பட்ட அதிகப்படியான இரத்தப்போக்கினாலும் அதிர்ச்சியினாலும் மேற்படி நபர் இறந்திருக்க கூடும் என நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.14. சா.பொ.3 -னினால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்.

கு.வி.

நான் 12 வருடங்களாக அரசு மருத்துவராக பணிசெய்கிறேன். எனக்கு இந்திய மருத்துவக்கழகத்தின் விதிமுறைகளும் நடைமுறைகளும் நன்றாக தெரியும். பொதுவாக இறந்த மனித உடலில் விறைப்பு தன்மை 1 முதல் 12 மணி நேரத்தில் பரவும் என்றால் சரி. விறைப்பு தன்மையானது தலையில் இருந்து பாதம் வரையிலும் பின்னர் பாதத்தில் இருந்து தலை வரையிலும் இரண்டு வழியாக பரவும் என்றால் சரீ. பிரேத பரிசோதனைக்கு எத்தனை மணி நேரத்திற்க முன்பாக மரணம் ஏற்பட்டிருக்கலாம் என எனது பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடவேண்டுமென்று சொன்னால் சரி. அதுபோல் எத்தனை காயங்கள் மற்றும் காயங்களின் அளவு பற்றி குறிப்பிடவேண்டுமென்றால் சரி. எனது பிரேத பரிசோதனை அறிக்கையில் பிரேத பரிசோதனைக்கு எத்தனை மணி நேரத்திற்க முன்பு பிரேதம் சம்பவிக்கப்பட்டது என்ற குறிப்பு இல்லை என்றால் சரி. அதேரபோல் எத்தனை காயங்கள் என்பது என்றும் காயத்தின் அளவு பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரி. ஆனால் எனது மருத்துவக்கழக விதியின்படி இவையெல்லாம் குறிப்பிடவேண்டுமென்ற விதி எனக்கு தெரியும் என்றால் சரி. வெட்டுக்காயத்திற்கும் சிதைந்த காயத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரி. வெட்டுக்காயம் என்பது முனை கூர்மையான ஆயுததால் வெட்டும்போது ஏற்படும் என்றால் சரி. அது சீரான கோட்டில் இருக்கும் என்றால் சரி. சிதைந்த காயம் என்பது சிதைந்த காணப்படும். நேர்கோட்டில் இருக்காது என்றால் சரி. சிதைந்த ஒழுங்கற்ற காயம் என்பது அறுக்கும்போது வரலாம். ஒன்று வெட்டுக்காயமாக இருக்கவேண்டும். அல்லது சிதைந்த காயமாக இருக்கவேண்டும் என்றால் சரி. சா.பொ.3 ஆயுதத்தால் ஒருவரை வெட்டினால் எந்த பகுதி ஆழமாக படிகிறதோ அந்த பகுதியில் இரத்தம் காணப்படும் என்றால் சரி. காயத்தின் அளவு குறிப்பிடாதநிலையில் வெட்டுப்பகுதியில் காயத்தின் ஆழம் எந்த அளவு இருக்கும் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்று சொன்னால் சரி. ஒருவருக்கு மரணம் ஏற்பட்ட

பிறகு 2 முதல் 4 மணி நேரத்திற்குள் நீல நிறமாகும் என்றால் மூச்சுதிணறினால் இறந்திருந்தால் அவ்வாறு ஏற்படும். இறந்தபின்னர் உடலில் உள்ள வேதியியல் மாற்றத்தினால் விரல்கள் நீல நிறமாக மாறும் என்று சொன்னால் அது தவறு. நுரையீரலில் அடைப்பு ஏற்படும்போது நுரையிரலில் உள்ள காற்றின் அழுத்ததினால் நுரை ஏற்படும் என்றால் சரி. நுரையீரல் தமனிகள் அறுபட்டதாக நான் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரி. நுரையீரலல் தமனிகள் அறுபடும்போது நுரையீரலில் ஏற்படும் அழுத்ததினால் தான் நுரை வெளிவரும் என்று சொன்னால் அது தவறு. கழுத்து பகுதி வெட்டப்படும்போது மூனையில் உறைந்து காணப்படுவதற்கு சாத்தியம் இல்லை. இரத்தநாளங்கள் அறுபடும்போது மூளையில் உள்ள இரத்தம் வெளிவர முடியாததால் திரும்ப மூளைக்கே சென்று இரத்தம் உறைந்து காணப்படும் என்று சொன்னால் சரியல்ல. முதுகில் ஏற்பட்ட காயம் கத்தியால் குத்தினால் ஏற்படும் என்று சொன்னால் சரியல்ல. வெட்டுப்பகுதியில் வெி%டேட்டிவ் பகுதிகளோ காணப்பட்டதா என்றால் காணப்படவில்லை. அதேபோல் மண் துகள்களும் காணப்படவில்லை என்றால் சரி. உண்ட உணவு செரிப்பதற்கு 3 முதல் 4 மணிநேரம் ஆகும் என்றால் உடலின் தன்மையை பொறுத்து மாறுபடும். உணவு பாதி செரித்த நிலை ஆரம்பிக்க ஒன்றரை முதல் 2 மணி நேரம் ஆகலாம் என்றால் 3 மணி நேரம் கூட ஆகலாம். வெட்டுக்காயம் என்பது முனை கூர்மையானதாலும் ஏற்படும். சிதைந்த காயம் பண் அருவாளால் ஏற்படும் என்றால் சரியல்ல. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையானது மருத்துவக்கழகத்தின் நடைமுறைகள் விதிமுறைகளுக்கு உட்பட்டு கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம். சந்திரன், மருத்துவர்

ஒப்பம்.எஎஎ, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.574/2018

DEPOSITION OF WITNESS 12 FOR PROSECUTION..

Name : தேவராஜன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.8.2019.

மு.வி.

நான் தற்போது எழுமலை காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிசெய்து வருகிறேன். கடந்த 1.4.2018ம் தேதி எம்.கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் பணிசெய்தபோது அயல் பணியாக எழுமலை காவல்நிலைய குற்ற எண்.92/2018. பிரிவு 302 இ.த.ச.வழக்கில் துரித முதல் தகவல் அறிக்கை தபாலை 8.40 மணிக்கு கடவுசீட்டை பெற்று உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண்.2 சென்று அதன்பின் மதுரை நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களுக்கு மதியம் 1 மணிக்கு சமர்ப்பித்தேன். உசிலம்பட்டி காவல்துணை கண்காணிப்பாளருக்கு சமர்ப்பித்தும், காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு சமர்ப்பித்தும், தனிப்பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பித்தும், குற்றப்பதிவேடு கூடத்தில் சமர்ப்பித்தும், டி.ஐ.ஜி அவர்களுக்கும் சமர்ப்பித்தும் நிலையம் வந்து அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் விரைவு தபாலை எடுத்து உரிய நபர்களிடம் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம். தேவராஜன்

ஒப்பம்.எஎஎ, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.574/2018

DEPOSITION OF WITNESS 13 FOR PROSECUTION..

Name : தங்கமாயன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.8.2019.

மு.வி.

நான் தற்போது எழுமலை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருக்கிறேன். கடந்த 1.4.2018 ம் தேதி அதே காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது காலை 11 மணிக்கு வட்ட காவல் ஆய்வாளர் சிவக்குமார் கு.எண்.92/2018 வழக்கில் இறந்த நல்லம்மாளின் பிரேதத்தை பிரேத விசாரணையை முடித்துக்கொண்டு மதியம் 12.30 மணிக்கு பிரேதத்தை மருத்துவ பரிசோதனை செய்யவேண்டி மாவட்ட தலைமை மருத்துவமனை உசிலம்பட்டி அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தை மதியம் 12.35 மணிக்கு பெற்று பிரேதத்தை டி.என்.01 ஜே 2575 என்ற எஸ்.ஆர்.ஆம்புலன்ஸ்-ல் ஏற்றி அங்க மச்ச அடையாளங்களை காட்டி பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியும் பிரேத பரிசோதனை முடிந்தபின், அன்று மாலை 5.45 மணிக்கு இறந்தவரின் உடைகைளான பிஸ்கட் கலரில் இரத்தக்கறையுடன் கருப்பு மற்றும் மெரூன் கலரின் டிசைன் போட்ட சேலை, இரத்தக்கறையுடன் கூடிய லைட்புளு கலர் ஜாக்கெட் ஆகியவற்றை கைப்பற்றி ஆய்வாளரிடம் ஒப்படைத்தும், பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன்.பிஸ்கட் கலரில் இரத்தக்கறையுடன் கருப்பு மற்றும் மெரூன் கலரின் டிசைன் போட்ட சேலை சா.பொ.6. இரத்தக்கறையுடன் கூடிய லைட்புளு கலர் ஜாக்கெட் சா.பொ.7. நான் தாக்கல் செய்த தனி அறிக்கை அ.சா.ஆ.15. ஆய்வாளர் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்.

கு.வி.

ஆய்வாளரோடு நானும் அவருடன் அவரது காரில் உடன் சென்றேன். கார் சம்பவயிடத்திற்கு நீர் வருகின்ற ஓடை வழியாக கார் சென்றது என்று சொன்னால் சரி. நாங்கள் சம்பவயிடத்திற்கு போகும்போது மதியம் 1.00 மணி இருக்கும். நாங்கள் சென்றபோது ஊர்காரர்கள் சம்பவயிடத்தில் நியை பேர்கள் இருந்தார்கள். அந்த ஊர் வி.ஏ.ஓ. மற்றும் தலையாரி வந்திருந்தார்கள் என்று சொன்னால் சரி. ஆம்புலன்ஸ்-க்கு காவல்நிலையத்தில் இருந்து போன் செய்தார்கள். சம்பவயிடத்திற்கது ஆம்புலன்ஸ் வரும்போது மதியம் 3.00 மணி இருக்கும். ஆம்புலன்ஸ் தனியார் ஆம்புலன்ஸ் ஆகும். பிரேதத்தை ஆம்புலன்ஸ்-ல் போலிசார் தான் எடுத்து வைத்தார்கள். மோப்ப நாய் சம்பவயிடத்திற்கு வந்ததா என ஞாபகம் இல்லை. நான் சொன்ன மாதிரி நான் ஆய்வாளருடன் சம்பவயிடம் செல்லவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம். தங்கமாயன்

ஒப்பம்.எஎஎ, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை